# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
## Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
## District Munsif, Arni.
## O.S.74/2016

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் நாள் திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

D.W.2 ஜெயராமன், வயது 56 , த/பெ கோபால் பிள்ளை

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் பி.வா.சா.ஆ.3 ஆவணம் இந்திராகாந்தி என்பவர் தானமாக அவருடைய நிலத்தை கொடுத்தார் என்றால் சரிதான், கோயிலுக்காக கொடுத்தார். மேற்படி பி.வா.சா.ஆ.3 சொத்து விவரத்தில் சர்வே எண்.232/12 மற்றும் 232/11D என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு கோயில் பெயரில் பட்டா வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். மேற்படி பட்டா எண் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பட்டாதான் மேற்படி கோயில் பட்டாவா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார். மேற்படி ஆவணம் **வா.சா.ஆ.29** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. மேற்படி ஆவணத்தில் பட்டா எண்.8325 என உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3ல் சொத்து விவரத்தில் சர்வே எண். சர்வே எண்.232/12 மற்றும் 232/11D என குறிப்பிட்டுள்ளது என்றாலும் ஆனால் பட்டா எண். 8325ல் சர்வே எண். 232/14 என வேறுப்பட்டுள்ளது என்றால் சரிதான், நாங்கள் கோயில் பத்திரத்தை மணியக்காரரிடம் காண்பித்து சர்வேயர் அதை சரி பார்த்துதான் மணியக்காரர் எங்களுக்கு இந்த பட்டாவை வழங்கினார். பி.வா.சா.ஆ.3 சொத்தானது இந்திராகாந்தி என்பவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

3. மேற்படி பி.வா.சா.ஆ.3ல் உள்ள சொத்தை இந்திராகாந்தி எவ்வாறு கோயிலுக்கு தானமாக கொடுத்தார் என்றாலும், யார் அவரிடம் மேற்படி நிலத்தை கேட்டது என்றால் அவராகவே முன் வந்து கோயிலுக்காக தானமாக கொடுப்பதாக கூறி கொடுத்தார். அதற்கு முன் மேற்படி சொத்து இந்திராகாந்திக்கு பாத்தியப்பட்டதா என்பதை நாங்கள் சரி பார்க்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 சொத்திற்கு மேற்கு புறம் சாலை புறம்போக்கு உள்ளது என்றால் சரிதான். நாங்கள் பி.வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்ட முன்னர் அல்லது பின்னரோ கோயில் நிலத்தை அளந்து எவ்வளவு நிலம் என்று சரி பார்த்தோமா என்றால் இல்லை.

4. வாதி எங்கள் மீது கோயில் நிர்வாகத்தை கவனிக்க கூடாது என இடைக்கால தடை உத்தரவு பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி இடைக்கால தடை உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு கோயில் சம்மந்தமாக நாங்கள் வசூல் செய்துள்ளதால் மேற்படி இடைக்கால தடை உத்தரவின் பேரில் மேல் முறையீடு செய்தார் என்றால் சரிதான். மேற்படி மேல் முறையீட்டின் உத்தரவில் கோயில் நிலம் பழைய நிலையிலேயே இருக்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டுள்ளது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது.

5. மேற்படி மேல்முறையீட்டு உத்தரவில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று எங்களுக்கு தெரியும் என்றாலும், தெரிந்தே கோயில் இடத்திற்கு வசூல் செய்து மறு சீரமைப்பு வேலைகளை செய்தோம் என்றால் வசூல் செய்து கோவில் கும்பாபிஷேகம் செய்தோம். மேல் முறையீட்டு உத்தரவில் Status Quo உள்ள நிலையில் நாங்கள் நீதிமன்ற அனுமதி பெற்றுதான் கோவிலை மறுசீரமைப்பு பணிகளை செய்யக் கூடாது என்றால் மேல் முறையீடு உத்தரவில் நாங்கள் கோவிலை மறு சீரமைப்பு செய்து கோவில் நிர்வாகம் செய்யலாம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி உத்தரவு நகலை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. நீதிமன்ற உத்தரவுபடி முன் அனுமதியின் பேரில்தான் கோவிலுக்காக வசூல் செய்வதும், மறு சீரமைப்பு செய்வதும் மற்றும் கும்பாபிஷேகப் பணிகளை செய்ய வேண்டும் என்றாலும், ஆனால் நீங்கள் அவ்வாறு நீதிமன்ற முன் அனுமதி பெறாமல் நீதிமன்ற உத்தரவை அவமதிப்பு செய்துள்ளீர்கள் என்றால் பொதுமக்கள் மற்றும் உறுப்பினர்கள் சேர்ந்துதான் மேற்படி பணிகளை செய்தோம் அவ்வாறு செய்வது தவறு என்றால் என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள் என்று சாட்சி கூறுகிறார்.

7. நாங்கள் கோயில் புனரமைப்பு செய்வது சம்மந்தமாக டிரஸ்டில் அனுமதி பெற்று மேற்படி செயல்களை செய்தோம் என்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் எங்கள் வசம் உள்ளதா என்றால் உள்ளது, அதை தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். மேற்படி கோயில் கும்பாபிஷேகம் செய்வதற்கான அச்சிடப்பட்ட நோட்டிசை வாதிக்கு கொடுத்தோமா என்றால் தலைவர், செயலாளர் செல்லவில்லை, மற்ற உறுப்பினர்கள் மூலம் கொடுத்தோம். **நீதிமன்ற கேள்வி - உறுப்பினர்கள் எத்தனை பேர் சென்றார்கள் என்றால் 5 நபர்கள் சென்றார்கள்.**

8. 2015ம் ஆண்டிலிருந்து இந்த டிரெஸ்ட் சம்மந்தமாக எந்த நிகழ்ச்சியும் நடத்தவில்லை என்றால் மாதம் மாதம் உறுப்பினர்களை அழைத்து பேசி மீட்டிங் போட்டு வருகிறோம். மேற்படி 10 வருடமாக மீட்டிங் நடந்ததற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் இல்லை. மேற்படி கோயிலில் சீட்டு நடத்துவதால் அதை வாதி தட்டி கேட்டதால்தான் அவர் மீது விரோதம் ஏற்பட்டது என்றாலும், கோயில் நிர்வாகத்தை நீங்கள் நிர்வாகம் செய்து வருகிறீர்கள் என்றால் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது. அதில் உள்ள பதிவுகளை மாதம் மாதம் எடுத்து வந்து கொடுக்கிறேன் என்று சாட்சி கூறுகிறார்.

9. கண்காணிப்பு கேமரா எந்த வருடம் பொருத்தப்பட்டது என்றால் கும்பாபிஷேகம் நடந்த 2025ம் ஆண்டுக்கு பின்னர்தான் கேமரா பொருத்தப்பட்டுள்ளது. என்னுடைய பி.வா.சா.ஆ.13, 14, 15 ஆவணங்களில் சீட்டு நடத்தியதற்கான ஆதாரம் உள்ளது என்றால் சீட்டு நடத்தியது உண்மைதான், ஆனால் கோயிலில் நடத்தவில்லை, மேற்படி சீட்டு நடத்தி கோயிலுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. எங்கள் ஆடிட்டர் கோயிலில் நடந்த சீட்டிற்கான தணிக்கை அறிக்கையை கொடுத்துள்ளார் என்றாலும், யார் யார் சீட்டு போட்டார்கள் என்ற விவரத்தை ரசீதுடன் இணைத்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் 20 பேர் சேர்ந்து சீட்டு நடத்தி அதை கோயிலுக்காக நன்கொடையாக கொடுத்தார்கள் சாட்சி தன்னிச்சையாக கூறுகிறார் மேற்படி பணம் சீட்டு பணம் கோயிலுக்குதான் சொந்தம் என்பதால் அதை கோவில் தணிக்கையில் காண்பித்துள்ளார்.

10. கோயிலுக்காக சீட்டு நடத்துவது தவறு என்றால் சரிதான். மேற்படி சீட்டு நடத்தி வந்த பணத்தை நன்கொடையாக கோவிலுக்கு தருவது தவறு என்றால் சரிதான். மேற்படி சம்பவங்களை வாதி தட்டி கேட்டதால்தான் அவரை நிர்வாகம் செய்ய விடாமல் தடுத்ததால் அவர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியவில்லை. மேற்படி வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியவில்லை.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது. மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

D.V.Koperundevi,
District Munsif,
District Munsif Court,Arni.